**World Socialist Web Site** **www.wsws.org**

# டொரோன்டோவில் நடக்கவிருக்கும் உலக சோசலிச வலைத் தள ஆண்டுதினக் கூட்டத்தில் டேவிட் நோர்த் பேசுகிறார்

**David North to speak at WSWS anniversary meeting in Toronto**
**30 March 2013**

இந்த ஆண்டு, இணையத்தில் மிகப் பரந்த அளவில் வாசிக்கப்படும் சோசலிசப் பத்திரிகையான உலக சோசலிச வலைத் தளத்தின் பதினைந்தாவது ஆண்டாகும்.

1998 ஆம் ஆண்டு பிப்ரவரி 14 ஆம் தேதியன்று உலக சோசலிச வலைத் தளம் தொடங்கப்பட்டது. முதலாளித்துவம் இறுதியாக வெற்றி பெற்று விட்டது என்றும் அதுவே “வரலாற்றின் முடிவு” என்றும் பெருநிறுவன ஊடகங்கள் பிரகடனம் செய்து கொண்டிருந்த சமயமாகும் அது. அமைதி மற்றும் வளமைக்கான ஒரு புதிய காலகட்டம் விடிந்து விட்டிருப்பதாகக் கூறப்பட்டது. ஆனால் வந்ததென்னவோ “பயங்கரவாதத்தின் மீதான போர்”, 1930களுக்குப் பிந்தைய மிக மோசமான பொருளாதார நெருக்கடி, தொழிலாள வர்க்கத்தின் வாழ்க்கைத் தரங்களில் ஒரு நாசகரமான குலைவு, ஜனநாயக உரிமைகள் மீதான முன்கண்டிராத தாக்குதல்கள், மற்றும் இவற்றின் விளைவாக ஏற்பட்ட ஆழமான கலாச்சார மற்றும் புத்திஜீவி நோக்குநிலைப் பிறழ்வு ஆகியவை தான்.

**Sunday, April 21, 2pm**

Toronto, Ontario
Bahen Centre for Information Technology (University of Toronto)
Room B024
40 St. George Street

இந்தக் கூட்டங்களில், சோசலிச சமத்துவக் கட்சியின் தேசிய தலைவரான டேவிட் நோர்த், உலக சோசலிச வலைத் தளத்தின் அரசியல் மற்றும் தத்துவார்த்த அடிப்படையையும் புரட்சிகர சோசலிசத்துக்கான போராட்டத்தில் காலூன்றியிருக்கும் அதன் வேர்களையும் மீளாய்வு செய்வார். இந்த வரலாற்றின் மீளாய்வு உரையில், ’போர் மற்றும் புரட்சியின் ஒரு புதிய சகாப்தத்தில் தொழிலாள வர்க்கத்தின் ஒரு சோசலிச இயக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான போராட்டம்’ என்ற சமகால அரசியலின் மிக அடிப்படையான பிரச்சினை குறித்து அவர் பேசவிருக்கிறார்.

Area Map